### உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள

# ஆர்.பாலகிருஷ்ணனின் பணி சிறக்கட்டும்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

**சென்னை, மார்ச் 1 -**

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள ஆர். பால கிருஷ்ணன் இ.ஆ.ப. (ஓய்வு) அவர்கள் சந்தித்து வாழ்த்து பெற்றதையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:-**

தமிழ்வழியில் படித்து, தமிழிலேயே குடிமைப் பணித் தேர்வெழுதி IAS ஆகி, தமிழாராய்ச்சியின் பரப்பைத் தமிழ்நாட்டையும் தாண்டி, ஏன் இன்றைய இந்திய நாட்டையும் தாண்டி அகலப்படுத்திய அறிஞர் பாலகிருஷ்ணன் அவர்கள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளதையொட்டி மகிழ்ச்சி நிறைந்த மனத்தோடு வாழ்த்தினேன்.

1812இல் வெளியான திருக்குறளின் முதல் அச்சுப் பதிப்பை அன்பளிப்பாகத் தந்தார்!

அவர் பணி சிறந்து, தொல்தமிழர் வரலாற்றின் பல புதிய பக்கங்களை உலகுக்கு வெளிக்காட்டட்டும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

# குறிஞ்சி மலர் மலர்ந்த நாள்

தலைவா உம்மை நினைத்தேன்,
என் கண்களில் நீர்;

உம் கொள்கை வழியில்
எம்மை அழைத்திட்டுச் செல்லும்,
தளபதியின் தொண்டனாய்,
கைக் கோர்த்துச் செல்கிறேன்;
இப்பொழுது என் கண்களில்
ஆனந்தக் கண்ணீர்;

தளபதியே நீர்
எங்கள் குடும்பத்தில் ஒருவர்,
எங்கள் உள்ளத்தில் வாழ்பவர்,
சொல்லால் நிலை நிற்பவர், செயலால்
நிலை உயர்ந்தவர்;

"மதம்" உமது பார்வையில் மனிதம்"
"வழிபாடு" அல்ல;
இந்த உண்மையை உணர்ந்தவர்
உமது வழி,
இந்த உண்மையை அறிந்தும்

குழப்புபவர்
மனித சமூகத்திற்கு எதிரி;



சாதிகள் இல்லையடி பாப்பா,
என முன் மொழிந்தான் பாரதி, இந்த
சமத்துவத்தை செயலாக்க,
உழைப்பதே உமது கொள்கை;

திராவிட விடியலால்
சமூகம் விழித்தது,
ஆன்மாவும் விழித்தது,
பகுத்தறிவு மலர்ந்தது,

கல்வி அறிவு பெருகியது,
அஞ்ஞானம் அழிந்தது,
விஞ்ஞானம் வளர்ந்தது,

மெய்ஞானம் உணர்ந்தான்
தமிழன், தன்னிலை உணர்ந்தான்,
தரணியில் உயர்ந்தான்,
தரணியை உயர்த்தினான்;

இந்நிலை எங்களுக்கு,
உமது உழைப்பால் கிடைத்தது,
தொடர்வோம் உம் வழியில்
வாழ்க நீர் பல்லாண்டு;



**எம். ஜாகீர் உசேன்**

### கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் 72-வது பிறந்தநாள் விழா!

# வேலூர் மாவட்ட 5 சட்டமன்றத் தொகுதிகளில் நல உதவிகள் - பொதுக்கூட்டங்கள் - தெருமுனைக் கூட்டங்கள்!

## மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. அறிக்கை!



வேலூர்,மார்ச். 1-

மார்ச் 1 அன்று கழக தலைவர், தமிழ்நாடு முதல்வர் திராவிட தியாக சுடர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்த நாள் விழாவை எழுச்சியோடு கொண்டாடிட வேண்டுமென வேலூர் மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. தனது அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு முதல்வர், கழக தலைவர் தளபதி அவர்கள், சமத்துவ பெரியார், பேரறிஞர் பெருந்தகை அண்ணா, தமிழின தலைவர் கலைஞர் வழி நின்று சமத்துவ, சமதர்ம மக்களாட்சியை தமிழகத்தில் வழிநடத்தி இந்திய முதல்வர்களில் முதன்மை முதல்வராக முத்திரை பதித்து அனைத்துத் தரப்பு மக்களிடையே நன்மதிப்பை பெற்று ஒவ்வொரு நாளும் திட்டங்கள் தீட்டி தமிழகத்தை முன்மாதிரி யான மாநிலமாக இந்தியாவே போற்றும் வண்ணம் தன்னலமற்ற உழைப்பை நல்கி எண்ணற்ற சாதனைகளை படைத்துவரும் திராவிட தியாக சுடர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்தநாளை வேலூர் மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து அமைப்புகளிலும் 28.02.2025 அன்று முரசொலி நாளிதழில் வேலூர் மாவட்ட திமுக சார்பில் வெளியிடப்பட்டுள்ள நிகழ்ச்சிநிரலின்படி கழக இருவண்ண கொடியேற்றி, ஏழை,எளியோர் நலிந்தோர்களுக்கு, ஆதரவற்றோர் ஆசிரமத்திற்கு, பள்ளி கல்லூரி மாணவர்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கி எழுச்சியோடு கொண்டாடிடும் பொருட்டு மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள் உரிய ஏற்பாடுகளை செய்திட வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் முன்னிட்டு 5 சட்டமன்ற தொகுதிகளில் கழக சிறப்பு சொற்பொழிவாளர்களை கொண்டு பொதுக்கூட்டங்கள் மற்றும் தலைமைக்கழக பேச்சாளர்களை கொண்டு தொடர் தெருமுனை கூட்டங்கள் நடத்திட மாவட்ட கழக நிர்வாகத்தால் 26.02.2025 அன்று கழக நாளேடான முரசொலி நாளிதழில் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சி நிரலின் அட்டவணைப்படி பொதுக்கூட்டங்கள் மற்றும் தொடர் தெருமுனை கூட்டங்கள் சிறப்பாக நடைபெற்று வெற்றி பெற உரிய முன்னேற்பாடுகளை செய்திட வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

எனவே தமிழ்நாடு முதல்வர், கழகத்தலைவர் அவர்களின் பிறந்தநாளில் நடைபெற உள்ள நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழா மற்றும் பொதுக் கூட்டங்கள், தொடர் தெருமுனை கூட்டங்கள் ஆகிய நிகழ்வுகளிலும் 02.03.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று முற்பகல் 11.00 மணியளவில் வேலூர் மாவட்ட திமுக அலுவலகத்தில் நடைபெறும் அறுசுவை அசைவ பிரியாணி விருந்து மற்றும் 72 கிலோ பிறந்தநாள் கேக் வெட்டும் நிகழ்விலும் வேலூர் மாவட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட நிர்வாகிகள்,

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தலைமை கழக நிர்வாகிகள், மாநில அணிகளின் துணை செயலாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், வட்ட, வார்டு, ஊர்கிளை நிர்வாகிகள் மற்றும் முன்னாள் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் அனைவரும் கலந்துகொண்டு விழாவை சிறப்பித்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்..

இவ்வாறு ஏ.பி.நந்தகுமார் தெரிவித்துள்ளார்.


## முரசொலி உரிமை விளக்கம்
## படிவம் – 4 விதி – 8

| | | |
|---|---|---|
| பிரசுரிக்கும் இடம் | – | முரசொலி அச்சகம், 180, கோடம்பாக்கம், நெடுஞ்சாலை, சென்னை – 600 034. |
| பிரசுர முறை | – | நாளிதழ் |
| வெளியிடுபவர் & அச்சிடுபவர் | – | கார்த்திகேயன் சண்முகசுந்தரம் |
| ஆசிரியர் பெயர் | – | கார்த்திகேயன் சண்முகசுந்தரம் |
| இனம் | – | இந்தியன் |
| முகவரி | – | 180, கோடம்பாக்கம், நெடுஞ்சாலை, சென்னை – 600 034. |
| உரிமையாளர் பெயர் | – | முரசொலி அறக்கட்டளை |
| மற்றும் முகவரி | | 180, கோடம்பாக்கம், நெடுஞ்சாலை, சென்னை – 600 034. |

மேற்கண்ட விபரங்கள் அனைத்தும் நான் அறிந்த வகையில் உண்மையானவை என்று நம்பிக்கையுடன் கூறுகிறேன்.

சென்னை
01.03.2025

கார்த்திகேயன் சண்முகசுந்தரம்
(ஒப்பம்)
வெளியிடுபவர்




# தி.மு.க.
# இளைஞர் அணி



## தி.மு.க. இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில், மருத்துவம் மற்றும் கல்வி உதவித் தொகையாக பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 25 பேருக்கு

கழக இளைஞர் அணிச் செயலாளர் – மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர்
திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் **ரூ.6,25,000/–** வழங்கினார்.

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்ட தி.மு.க. இளைஞர் அணி அறக்கட்டளை மாதந்தோறும் பல்வேறு உதவிகளைச் செய்து வருகிறது.

அந்த வகையில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இளைஞர் அணிச் செயலாளராகப் பொறுப்பேற்றதில் இருந்து, கழக நிகழ்ச்சிகளுக்குச் செல்லும்போது நிர்வாகிகளும் உடன்பிறப்புகளும் அளிக்கும் நன்கொடைகளைக் கொண்டு, கல்வி, மருத்துவம் மற்றும் கழக முன்னோடிகளுக்கான நிதி உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன.

பொதுமக்களைச் சந்திக்கும்போது பெறப்படும் மனுக்கள் மற்றும் மாவட்டக் கழகச் செயலாளர், இளைஞர் அணி நிர்வாகிகளின் பரிந்துரையுடன் வரும் கோரிக்கை மனுக்களை ஆய்வு செய்து நிதி உதவிகளை வழங்கி வருகிறார், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின். பிப்ரவரி மாதத்திற்கான நிதி உதவிகளைப் பெறும் 25 பயனாளிகளின் விவரம் வருமாறு:

| வ. எண் | பெயர், முகவரி |
|---|---|
| 1. | மு.சுருளியப்பன், 186, கரியக்கம்மாள் கோயில் தெரு, புலிக்குத்தி, உத்தமபாளையம், தேனி – 625 524 |
| 2. | அ. சஹானா நஸீரின், த/பெ. அக்பர் அலி, ரோட்டுத் தெரு, சாத்துக்குடல் மேல்பாதி, விருதாச்சலம் வட்டம், கடலூர் – 606 001 |
| 3. | ரா.காவியா, த/பெ. ராமலிங்கம், காளியம்மன் கோவில் தெரு, தீவம்பாள்பட்டினம், தலைக்காடு (அ), திருத்துறைப்பூண்டி தாலுகா, திருவாரூர் – 614 711 |
| 4. | க.பவானி, க/பெ. டில்லிபாபு, 241, கிருஷ்ணன் தெரு, பிள்ளையார்பாளையம், காஞ்சிபுரம் – 631 501 |
| 5. | ஜெ.ராஜன், த/பெ. ஜெயராமன், 15/8, பஜனை மட சன்னதித் தெரு, வீரவநல்லூர், திருநெல்வேலி – 627 426 |
| 6. | சீ.உதயநிதி, த/பெ. சீனிவாசன், நீலகண்டராயன்பேட்டை கிராமம், அம்மூர் வழி, சோளிங்கர், இராணிப்பேட்டை – 632 501 |
| 7. | சே.பர்ஜானா, த/பெ. சேக் மைதீன், 7/58, 7–வது தெரு, வனத்துறைக் குடியிருப்பு, பெரும்பாக்கம், சென்னை – 600 100 |
| 8. | ஏ.எஸ்.அபிராமி, 130, அயக்கோட்டுவிளை, புத்தன்சந்தை, இடைக்கோடு, விளவங்கோடு, கன்னியாகுமரி – 629 152 |
| 9. | தி.ஹனீஷ், த/பெ. தினேஷ்குமார், 429/357, நாடார் தெரு, சாணார்பாளையம், திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் – 637 211 |
| 10. | தி.நிவேந்தன், த/பெ. திருநாவுக்கரசர், 8/11, தோட்டக்கார மட தெரு, திருத்தணி, திருவள்ளூர் – 631 209 |
| 11. | என்.ஜி.ஏகாம்பரம், த/பெ. என்.வி.கணபதி, 11–3–61–சி, நடுத்தெரு, சிந்தலப்பட்டடை, நகரி மண்டலம், சித்தூர், ஆந்திர மாநிலம் – 517 590 |
| 12. | சசிரேகா, க/பெ. பாலசந்திரன், 14, கொண்டசாமி லே அவுட், மசக்காளிப்பாளையம், பீளமேடு, கோயம்புத்தூர் – 641 004 |
| 13. | சே.ராபின்சன், த/பெ. சேவியர், 186–ஏ, செபஸ்தியார்புரம், கார்க்கமலம், மணலூர் (அ), மணமேல்குடி தாலூகா, புதுக்கோட்டை – 614 620 |
| 14. | அ.டார்வின் பால், த/பெ. அருண், 11/6, மங்களபுரம் 4–வது தெரு, சேத்துப்பட்டு, சென்னை – 600 031 |
| 15. | பூ.பழ.தனேந்திரன், த/பெ. பழனியப்பன், பூதநத்தம் (கி), மெணசி அஞ்சல், பாப்பிரெட்டிப்பட்டி தாலூகா, தருமபுரி – 636 904 |
| 16. | புண்ணியகோடி, த/பெ. அமிர்தம், 1/17, கோவிந்தசேரி, பாணாவரம் (அ), சோளிங்கர், வாலாஜா தாலூகா, இராணிப்பேட்டை – 632 505 |
| 17. | சு.முத்துகிருஷ்ண பெருமாள், த/பெ. சுப்பு கோனார், 17/197, அம்மன் கோயில் தெரு, தச்சன்விளை, அரசூர் ஊராட்சி, சாத்தான்குளம் வட்டம், தூத்துக்குடி – 628 656 |
| 18. | ச.சர்வஜித், த/பெ. சங்கர்குமார், 1/680, சிவசக்தி நகர், பாம்பன், இராமநாதபுரம் – 623 521 |
| 19. | நா.சேதுநாதன், த/பெ. நாராயணன், சிக்களூர் (அ), அரூர் வட்டம், தருமபுரி – 636 906 |
| 20. | த.அஜித், த/பெ. தவமணி, 8, மோட்டூர் கிராமம், சிறுவாக்கம், வாலாஜாபாத், காஞ்சிபுரம் – 631 552 |
| 21. | பா.ரமேஷ், த/பெ. பாலகிருஷ்ணன், 75/12, வீரமுத்துத் தெரு, தெற்கு உடையார்பாளையம், ஆத்தூர், சேலம் – 636 102 |
| 22. | ப.சுஜிதா, த/பெ. பழனி, 2721, புகழேந்தி சாலை, கிருஷ்ணாபுரம், மருத்துவக் கல்லூரி சாலை, தஞ்சாவூர் – 613 004 |
| 23. | சங்கரநாராயணண், த/பெ. லட்சுமணன், 45/10, அண்ணா நகர், சித்தாப்புதூர் அஞ்சல், கோயம்புத்தூர் – 641 044 |
| 24. | கி.வசந்தா, க/பெ. கிருஷ்ணன், 6, பண்டரிநாதபுரம், பீமநகர், திருச்சி – 620 001 |
| 25. | சு.அபிராமி, க/பெ. சுரேஷ் முத்துசாமி (லேட்), கிழக்குத் தெரு, அணைக்கரைப்பட்டி, ஆண்டிப்பட்டி வட்டம், தேனி – 625 531 |

**“அன்பகம்”**
சென்னை – 18.
நாள் : 27–02–2025.